பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 12 2025 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் அலுவலகத்தின் பெயர் “Seva Tirth” என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2. காசி தமிழ் சங்கமம், கங்கை - காவிரி கலாச்சாரங்களை ஒன்றிணைப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. கார்த்திகை தீப திருநாளையொட்டி திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலில் இன்று அதிகாலை பரணி தீபம் ஏற்றப்பட்டது.

5. உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் அலுவலகத்தின் பெயர் “Seva Tirth” என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஆளுநர் மாளிகைகள் மக்கள் மாளிகை என்றும், துணைநிலை ஆளுநர் இல்லங்கள் மக்கள் இல்லங்கள் என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி பிரதமர் அலுவலகத்தின் பெயரை மாற்றியிருப்பதாக கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வல்லரசு நாடாக மாற்றுவதற்கான நாட்டின் பயணத்தில் இந்தப் பெயர் மாற்றம் முக்கிய மைல்கல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திரு. நரேந்திர மோடி பிரதமர் பொறுப்பை ஏற்றதில் இருந்து அதிகாரம் என்பதன் பொருளை சேவை என்று மாற்றியிருப்பதுடன், மக்கள் சேவையில் 24 மணி நேரமும் தம்மை ஈடுபடுத்தி பிரதான சேவகராக திகழ்கிறார் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காசி தமிழ் சங்கமம் கங்கை மற்றும் காவிரி கலாச்சாரம், பாரம்பரியத்தை ஒன்றிணைப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் நேற்று தொடங்கிய இந்த நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், இந்த நிகழ்ச்சியின் மூலம் தமிழ் மொழிக்கு உரிய மரியாதையும், தேசிய அளவில் ஆதரவும் கிடைத்து வருவது மகிழ்ச்சியளிப்பதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, ராஜேந்திர சோழன் ஆட்சியில் கங்கையில் இருந்து புனித நீர் எடுத்துவரப்பட்டு கங்கைகொண்ட சோழபுரம் கட்டப்பட்டதை நினைவுகூர்ந்தார்.

(Voice Byte - Governor - 30 Sec)

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழ் மொழியின் சிறப்பை உலகெங்கும் கொண்டு சேர்த்திருப்பதாக கூறினார்.

(Voice Byte - L. Murugan - 35 Sec)

முன்னதாக வாரணாசி நமோ காட் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியை டாக்டர் எல்.முருகன் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிந்து அவர்களது உரிமைகள் மற்றும் நலனுக்காக பாடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

“மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய சமுதாயம் வளர்ச்சியடைந்தால் சமூக முன்னேற்றம் ஏற்படும்” என்பதே இந்த ஆண்டின் மையக் கருத்தாகும்.

இந்நாளையொட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வு மென்மேலும் ஒளிமயமாக திகழ நாம் அனைவரும் பாடுபடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டு மனை, உதவித்தொகை, மருத்துவ சிகிச்சை வசதி என பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கார்த்திகை தீப திருநாளையொட்டி திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோவிலில் இன்று அதிகாலை பரணி தீபம் ஏற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மாலையில் திருவண்ணாமலை மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte - Ravichandran - 45 Sec)

இந்நாளையொட்டி மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பருவமழை குறைந்து குளிர்காலம் தொடங்குவதன் அறிகுறியாக தமிழக மக்கள் பன்னெடுங்காலமாக கார்த்திகை தீபம் ஏற்றி வழிபட்டு வருவதாக கூறியுள்ளார்.

தமிழகத்தின் வடக்கே திருவண்ணாமலையிலும், தெற்கே திருப்பரங்குன்றத்திலும் கார்திகை தீபம் ஏற்றப்படுவதை சுட்டிக்காட்டியுள்ள டாக்டர் எல். முருகன், இந்நாளில் இல்லங்கள் தோறும் தீபம் ஏற்றி வழிபாடு நடத்துவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 94 சதவீத அளவிற்கு இந்தப் பணிகள் முடிவடைந்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

(Voice Byte - Collector - 54 Sec)

<<<<>>>>

வங்கக் கடலில் வட தமிழகம் மற்றும் புதுச்சேரியை ஒட்டிய கடலோரப் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் தெற்கு - தென்மேற்கு திசையில் நகர்ந்து சென்னைக்கு நூறு கிலோ மீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு 40 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலைகொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தென்மேற்கு திசை நோக்கி மெதுவாக நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவிழக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடலில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் இன்று நண்பகல் வரை மீனவர்கள் தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மேற்கு மத்திய வங்கக் கடல் பகுதிக்கு மீன் பிடிக்கச் செல்வதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் போருக்கு தீர்வு காண்பது தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பின் சிறப்பு பிரதிநிதிகள் மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

-------------

தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச அமைப்பின் தலைமைப் பொறுப்பை சுவீடனில் இன்று ஏற்றுக்கொள்கிறார்.

-------------

சென்னை-பெங்களூரு விரைவுச் சாலையில் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் மூலம் 26 இடங்களில் வாகனங்களுக்கான சார்ஜிங் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய சாலைப்போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------

தமிழகத்தில் உள்ள சித்தா, ஆயுர்வேதா, ஹோமியோபதி மற்றும் யுனானி மருத்துவக் கல்லூரிகளில் பட்டப் படிப்பு இடங்களுக்கான இரண்டாம் கட்ட மாணவர் சேர்க்கைக்கு இன்றும் நாளையும் இணையவழியில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

-------------

திருப்பூர் மாவட்டம் உடுமைலை அருகேயுள்ள திருமூர்த்தி மலைப் பகுதியில் மழைப்பொழிவு குறைந்ததையடுத்து, பஞ்சலிங்க அருவியில் குளிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

-------------

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகேயுள்ள வடுகப்பட்டி புறவழிச் சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் இருவர் உயிரிழந்தனர்.

-------------

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாறு புனித சவேரியார் பேராலய திருவிழாவின் முக்கிய அம்சமான தேர்பவனியில் தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று கும்பிடு நமஸ்கார நேர்ச்சை செய்து வழிபட்டனர்.

-------------

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின்கீழ் இதுவரை 9 லட்சத்து 86 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பயனடைந்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

-------------

சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

-------------

சென்னை சைதாப்பேட்டை சத்யா நகரில் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்ட நிலத்தில் பொதுமக்களுக்கான நடைபாதை மற்றும் சிறுவர் பூங்கா அமைக்கப்படும் என்று அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மதுரையில் நேற்று நடைபெற்ற ரவுண்ட் ராபின் லீக் போட்டியில் இந்திய அணி சுவிட்சர்லாந்து அணியை 5-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மற்றொரு போட்டியில் பெல்ஜியம் அணி 10-0 என்ற கோல் கணக்கில் எகிப்தை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது.

இதையடுத்து நாளை மறுநாள் நடைபெற உள்ள காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - பெல்ஜியம் அணியை எதிர்கொள்கிறது.

<<<<The End>>>>